# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2004 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2004. 05. 31 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# பலவந்தமாக மதம் மாற்றுவதைத் தடை செய்தல்

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**பலவந்தமாக, நிர்ப்பந்திக்கப்பட்டு அல்லது மோசடியான விதத்தில் எவரேனு மொருவரை ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத் திற்கு மதம் மாற்றுவதைத் தடை செய்வதற்கும் அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களுக்குமானதொரு சட்டமூலம்**

பாராளுமன்ற உறுப்பினர் வண. கலாநிதி ஓமல்பே சோபித தேரர் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 5.25** **தபாற் செலவு : ரூபா 4.50**

## பலவந்தமாக, நிர்ப்பந்திக்கப்பட்டு அல்லது மோசடியான விதத்தில் எவரேனுமொருவரை ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மதம் மாற்றுவதைத் தடை செய்வதற்கும் அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களுக்குமானதொரு சட்டம்

*புத்தர் பெருமான் புத்தர் நிலையை அடைந்து எட்டாவது மாதத்தில் இலங்கையின் மஹியங்கனைக்கு வருகைதந்ததிலிருந்தும் 3 ஆம் புத்த வருடத்தில் மிஹிந்து தேரர் வருகைதந்ததிலிருந்தும் இலங்கை வாழ் மக்களில் பெரும்பான்மையானோர் பௌத்த மதத்தைத் தமது முதன்மையான மதமாக ஏற்றும், வளர்த்தும், பேணியும் வந்துள்ளனராதலாலும்,* முன்னுரை.

*இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பின் 10 ஆவது உறுப்புரையின் மூலமும் 14 ஆவது உறுப்புரையின் (1)(உ) வாசகத்தின் மூலமும் அனைத்து மதங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ள அதேவேளை இலங்கைக் குடியரசினால் பௌத்த சாசனத்திற்கும் பௌத்த மதத்துக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாதலாலும்,*

*பௌத்தர்களும் அதேபோன்று பௌத்தர்களல்லாதோரும் பாரதூரமான விதத்தில் பலவந்தமாக, நிர்ப்பந்திக்கப்பட்டு அல்லது மோசடியான விதத்தில் வேறு மதங்களுக்கு மதம் மாற்றப்படக்கூடிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனராதாலலும்,*

*இலங்கை வாழ் மக்கள் வரலாற்று ரீதியாக அனுபவித்து வந்த பரஸ்பர மத நட்புறவை மேம்படுத்திப் பாதுகாப்பதன் அவசியத்தை முக்கியமாக மகா சங்கத்தினரும் ஏனைய மதத் தலைவர்களும் உணர்ந்துள்ளனராதலாலும்,*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக* :—

**1.** இச்சட்டம் 2004 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பலவந்தமாக மதம் மாற்றுவதைத் தடை செய்வதற்கான சட்டமென எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** எவரேனுமொருவர் இன்னொருவரைப் பலவந்தமாக, நிர்ப்பந்தத்தின் மூலம் அல்லது ஏதேனும் மோசடியான செயலின் மூலம் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு நேரடியாகவோ அல்லது வேறுவிதத்திலோ மதம் மாற்றுதல் அல்லது மாற்றுவதற்கு எத்தனித்தல் அல்லது அதற்கு உதவி ஒத்தாசை வழங்குதலாகாது.

*பலவந்தமாக மதம் மாற்றப்படுதல் தவறொன்றாகும் என்பது.*

**3.** (அ) ஒரு மதத்திலிருந்து நீங்கி இன்னொரு மதத்தைத் தழுவுகின்ற எவரேனுமொருவர், அமைச்சரினால் குறித்துரைக்கப்படுகின்ற காலகட்டத்தினுள் வேறு மதத்தைத் தழுவிய பிரதேசத்துக்குரிய பிரதேச செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

*பிரதேச செயலாளருக்கு அறிவித்தல்.*

(ஆ) எவரேனுமொருவர் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்துக்கு மதம் மாறுகின்றபோது நடைபெறுகின்ற மதச் சடங்குகளைத் தாமாகவே நிறைவேற்றிக்கொள்வாரெனில் அல்லது நேரடியாக அல்லது மறைமுகமாக அவ்வாறானவற்றுக்கு வசதிசெய்கின்ற ஒருவர் அமைச்சரால் குறித்துரைக்கப்படுகின்ற காலகட்டத்தினுள் மதமாற்றம் நடைபெற்ற பிரதேசத்தின் பிரதேச செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

**4.** (அ) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் குடியியல் உரிமைகளுக்குப் பாதிப்புகள் எதுவும் ஏற்படாதவாறு இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்பட்டுள்ளாரென நீதவான் ஒருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஒருவர் ஐந்து வருடத்துக்கு மேற்படாதவொரு காலத்துக்கான சிறைத்தண்டனையும் ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு மேற்படாத ஒரு தொகைத் தண்டப் பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

*தவறுகள்.*

ஆயினும், பராயமடையாதவர், பெண் ஒருவர் அல்லது முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவரான எவரேனுமொருவர் தொடர்பில் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்பட்டுள்ளாரென நீதவான் ஒருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஒருவர் ஏழு வருடத்துக்கு மேற்படாதவொரு காலத்துக்கான சிறைத்தண்டனைக்கும் ரூபா ஐந்து இலட்சத்துக்கு மேற்படாத ஒரு தொகைத் தண்டப் பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்.

(ஆ) ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமெதுவுமின்றி இச்சட்டத்தின் 3 (அ), (ஆ) பிரிவுகளுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளாரென நீதிவான் ஒருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஒருவர் ஐந்து வருடத்துக்கு மேற்படாததொரு காலத்துக்கான சிறைத் தண்டனைக்கும் ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு மேற்படாத ஒரு தொகை தண்டப் பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்.

வழக்குத் தொடர்தல்கள்.

**5**. நீதவான் ஒருவர் முன்னிலையில் வழக்குத் தொடர்தல்கள் பின்வருமாறு நடைபெறலாம் :—

(அ) பிரதேச செயலாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால்,

(ஆ) அநீதிக்கும், பாதிப்புக்கும் உள்ளான ஒருவர் அல்லது பராயமடையாத ஒருவரெனில் அவரது தாய், தந்தை அல்லது சட்டரீதியான பொறுப்பாளர் ஒருவர் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளதாக நியாயமான காரணத்துடன் நம்புகின்றவரும் ஆர்வம் காட்டுகின்றவருமான ஒருவர் பொதுமக்கள் நன்மையைக் கருதி, பொலிஸில் செய்கின்ற முறைப்பாட்டின் மீது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டத்தின் 136 ஆம் வாசகத்தின் பிரகாரம் பொலிஸினால்,

(இ) அநீதியினால் பாதிக்கப்பட்ட ஒருவரால்,

(ஈ) வழக்கறிஞர் ஒருவரால்,

(உ) அமைச்சரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒருவரால்,

**6**. நீதித்துறை விடயத்துக்குப் பொறுப்பாகச் செயலாற்றுகின்ற அமைச்சரால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அமுலாக்கும் பொருட்டு, விதிகளும், ஒழுங்குவிதிகளும் ஆக்கப்படலாமென்பதோடு, அவை வர்த்தமானி அறிவித்தலொன்றின்மூலம் வெளியிடப்படுதலும் வேண்டும். அத்துடன் அவற்றைப் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்தலும் வேண்டும். ஒழுங்கு விதிகள்.

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**8**. இச்சட்டத்தினுள் வேறுவிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலேயொழிய — பொருள் கோடல்.

(அ) ‘நிர்ப்பந்திக்கப்படல்’ என்பது,

(1) அன்பளிப்புக்கள் மூலம் அல்லது பணத்தினால் அல்லது வேறுவிதத்தில் வெகுமதிகளை வழங்குதல்,

(2) பண்டங்கள் ரீதியில், நிதியியல் ரீதியில் உதவிகளை வழங்குதல் மூலம் நடைபெறுகின்ற நிர்ப்பந்தங்களாகும்,

(3) தொழில் பெற்றுக் கொடுத்தலினால் அல்லது தொழிலில் பதவியுயர்வு பெற்றுக் கொடுப்பதிலிருந்தும்.

(ஆ) ‘மதம் மாற்றுதல்’ என்பது, ஒரு மதத்திலிருந்து நீங்கி இன்னொரு மதத்தைத் தழுவுதலாகும்.

(இ) ‘பலவந்தம்’ என்பது, ஏதேனுமொரு விதத்திலான அச்சுறுத்தல், துன்புறுத்தல் அல்லது பாதிப்பை ஏற்படுத்துதல் அல்லது மத வெறுப்பை வெளிக்காட்டுதல் அல்லது மதத்தை அல்லது மத நம்பிக்கையை இழிவாகக் கருதுதல் ஆகும்.

(ஈ) ‘மோசடியான’ என்பது, உண்மைக்குப் புறம்பான விடயங்களை முன்வைத்தல் உட்பட ஏதேனுமொரு விதத்திலான மோசடியான உபாயங்களாகும்.

(உ) ‘பராயமடையாதவர்’ என்பது, 18 வயதுக்குக் குறைந்த ஒருவராவார்.

### *1 வது அட்டவணை*

1. *சமுர்த்தி பெறுநர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளவர்கள்*
2. *சிறைக்கைதிகளாக உள்ளவர்கள்*
3. *புனர்வாழ்வளிப்பு நிலையங்களில் உள்ளவர்கள்*
4. *தடுப்புக்காவல் நிலையங்களில் உள்ளவர்கள்*
5. *உடல், உள பாதிப்புக்குள்ளானவர்கள்*
6. *ஏதேனுமொரு நிறுவனத்தில் சேவையாற்றுகின்றவர்கள்*
7. *முப்படையில் அல்லது பொலிஸில் சேவையாற்றுகின்றவர்கள்*
8. *மாணவர்கள்*
9. *மருத்துவமனையில் அல்லது வேறு சிகிச்சை நிலையங்களில் உள்ள வர்கள்*
10. *அகதி முகாம்களில் உள்ளவர்கள்*
11. *அமைச்சரால் குறித்துரைக்கப்படும் வேறேதேனும் வகையைச் சேர்ந்தவர்கள்.*

---

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*